தமிழ்ச் சிட்டு

மாணவர் எழுச்சிகள், புரட்சிகள் மாந்தரின் நலம்பெற எழுகவே!

மாணவர் மனங்களோ புதுவயல்!
மற்று, அவர் செயல்களோ புதுப்பயிர்!
விஞ்ஞன நினைவுகள் களைகளாம்!
புதுப்புது விளைவுதாம் பெருமையாம்!

முன்னவர் கருத்தெலாம் உரங்களாம்!
முதியவர் சொல்பவை பாயும்நீர்!
பின்னவர் இவரினும் மேம்படப்
பேசுதல், எழுதுதல் தேவையாம்!

அடித்தளம் புதுமையாய் அமைத்தலும்,
அதன்மேல் இலக்கியம், அறிவியல்,
குடித்தன வாழ்வியல், குமுகியல்,
கூர்த்திடும் பொதுவியல், பொருளியல்—

எனுமிவை யாவினும் புதுமைகள்,
ஏறிடும் சிந்தனை, விளைவுகள்,
முனுமுனுப் பிலாதநல் முயற்சிகள்
முழுமையாய்த் தருவதே கடமையாம்!

மாணவர் எழுச்சிகள், புரட்சிகள்,
மாந்தரின் நலம்பெற எழுகவே!
தூண் அவர்! எதிர்வரும் உலகிலே
தோற்றுக, பெரும்பயன் நலன்களே!

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

குரல் : 21
இசை: 8

விலை:
உருபா : 1-50

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

13. பெல்ஜியம் (BELGIUM)—குடியரசு.

நிலப்பரப்பு: 30,519 ச.அ.மா;
மக்கள் தொகை: 98,50,000;
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு: 0.1%
மக்கள் வாழ்வு எல்லை: ஆண்: 69 ஆண்டு;
பெண்: 75 ஆண்டு.
எழுத்தறிவு: 98%
தலைநகர்: புருசெல்ஸ் (Bruxelles) (Brussels)
மொழி: பிலிமிஷ் (Dutch), பிரெஞ்சு, செர்மன்.
நாணயம்: பெல்ஜியம் பிராங்க்;=100 சென்டிம்ஸ்;

14. லக்சம்பர்க் (LUXEMBOURG)—குடியரசு.

நிலப்பரப்பு: 2,586 ச.அ.மா;
மக்கள் தொகை: 3,66,000;
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு: 0.04%
மக்கள் வாழ்வு எல்லை: ஆண்: 68 ஆண்டு;
பெண்: 75 ஆண்டு;
எழுத்தறிவு: 100%
தலைநகர்: லக்சம்பர்க்;
மொழி: லக்சம் பர்கிஸ், பிரெஞ்சு, செர்மன்;
நாணயம்: லக்சம் பர்க் பிராங்க்;=100 சென்டிம்ஸ்;

15. செகோசுலொவேக்கியா (CZECHOSLOVAKIA). —குடியரசு.

நிலப்பரப்பு: 1,27,869 ச.அ.மா;
மக்கள் தொகை: 1,54,00,000.
மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டுக்கு: 0.7%
மக்கள் வாழ்வு எல்லை: ஆண்: 67 ஆண்டு;
பெண்: 74 ஆண்டு;
எழுத்தறிவு: 99%
தலைநகர்: பிரகா (Praha (Praque)
மொழி: செக், ஸ்லாவக்,
நாணயம்: கொருணா (Koruna)=100 ஹலீரு;

16. அங்கேரி. (HUNGARY)—குடியரசு.

நிலப்பரப்பு: 93,032; ச.அ.மா;
மக்கள் தொகை: 1,06,80,000;
மக். தொ: பெ: (ஆண்டுக்கு): 0.4%
மக்: வா: எ: ஆ: 67 ஆண்டு; பெ: 73 ஆண்டு;
எழுத்தறிவு: 98%
தலைநகர்: புடாபெஸ்டு. (Budapest);
மொழி: அங்கேரியன் (மெக்யார்)
நாணயம்: ஃபோரின்ட்;

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

கனித்தமிழ்

சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 21] (தி.பி. 2022) துலை-நளி (நவம்) 91 [இசை 8

மாணவர் எழுச்சிகள்!

"இளமையோ எச்செயலும் செய்யும்!
இளமை அறிவோ டியைந்தால்,
நாட்டுக்கு விளைவதெல்லாம் நன்மையே!"

—என்பார் பாவேந்தர் பாரதிதாசன்!

இளமைப் பருவம் துடிப்பு மிக்கது; துணிவு மிக்கது. பொய், வஞ்சம், சூது-மிகுதியும் அறியாதது. எனவே, கற்பது முதல், காதல், வீரம் அனைத்துக்கும் இளமை செயற்களமாக உள்ளது.

இளமையும் கல்வி ஆர்வமும் நிறைந்த பருவமே மாணவப் பருவம். காதலும் வீரமும் விளைகின்ற பருவம் மாணவப் பருவமே! இவ்விரண்டு உணர்வுகளும் உயிர் மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத் தேவை உடையன. இவ் விரண்டு உணர்வு எழுச்சிகளும் இளமையின் இரண்டு முனைகள்! ஆனால் ஒன்றையொன்று சார்ந்து இயங்குவன! ஒன்றினால் ஒன்று கூர்மை எய்துவது! இரண்டும் தவறான உணர்வுகள் அல்ல! ஆனால் இரண்டு உணர்வுகளும் உயிரின், உள்ளத்தின், உடலின் முழு ஆற்றல்களையும் அடிப்படுத்துக் கொண்டு எழுச்சிப் பெறுவதால், இரண்டுக்கும் மாந்தப் பரு

வத்தின் வேறு எந்தப் பருவத்தினும் உந்து வேகம் மிகுதி! இவ் வேகம் உள்ளத்தின் அளவாக எழுந்து, அறிவின் அளவாகச் சார்ந்து நின்று, உடலின் அளவாகச் செயல்படும்பொழுது, இளமையால் எந்த ஒரு நல்ல வினையையும் செய்து விட முடியும் என்பதை உலகில் உள்ள அனைத்து மொழி இலக்கியங் களும் பறை சாற்றுகின்றன.

ஆனால், இவ்வுணர்வுகள் இரண்டும் உடலின் அளவாக எழுச்சி கொண்டு, உள்ளத்தைத் துணைக்கொண்டு, அறிவுணர் வைப் புறந்தள்ளி இயங்குமானால், எந்த ஒரு செயலும் கொடுமையாக மாறிவிட வாய்ப்பு மிகுதி!

காதல் உணர்வு வீரத்தை எழுச்சிக் கொள்ளவும், வீர வுணர்வு காதலை மலர்ச்சி கொள்ளவும் செய்கின்றன. இரண்டு உணர்வுகளும் உடலைத் தட்டி எழுப்பிச் செயலுக்குத் தூண்டு கின்றன.

கண்ணின் கடைப் பார்வை
காதலியர் காட்டி விட்டால்,
மண்ணில் குமரர்க்கு
மாமலையும் ஓர் கடுகாம்!

—என்பார் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன்!

காற்றில் ஏறி அவ்
விண்ணையும் சாடுவோம்,
காதற் பெண்கள்
கடைக்கண் பணியிலே!

என்பார் பாரதியார்!

இந்த இரண்டு உணர்வுகள்தாம் உலக வரலாற்றையே உருவாக்குகின்றன; அதைத் திசை மாற்றமும் செய்கின்றன. ஆனால் இவ்விரண்டு உணர்விலும் கால் வைக்காமல் ஒரே உணர்வில் மட்கி மடிந்து போனவர்களின் வரலாறுகளும் ஏராளம்!

மாணவப் பருவத்தில் இவ்விரண்டு உணர்வுகளுமே கொழுந்து விட்டு எரிவதால், இவற்றால் ஊக்கம் பெற்று, நற் செயலை நோக்கமாகக் கொண்டு இளைஞர்கள் இயங்குவார்களா னால், உலகில் விளையாத ஆக்கச் செயல்களே இல்லை எனலாம்.

அண்மையில் தமிழ்நாட்டிலும், வடநாட்டின் சில மாநிலங்களிலும் மாணவர்தம் எழுச்சிகள் பரவலாகி நின்று வருவதை இளைஞர்கள் செய்தித் தாள்களின்வழி உணர்ந்திருப் பார்கள். இந்தியாவில் மட்டுமின்றி உலகப் பெரும்பான்மை நாடுகளிலும் மாணவர் எழுச்சிகள் தலைதூக்கி வருகின்ற கால கட்டம் இது! அனைத்து எழுச்சிகளுமே மக்கள் உரிமைகளையே அடிப்படையாகக் கொண்டு நிற்கின்றன என்பதையும் அவர்கள் ஊன்றிக் கவனித்தல் வேண்டும்!

சீக்கியர்களின் மதமும் பொற்கோவிலும்!

எவ்வாறு இந்துக்களுக்குக் காசியும், இசுலாமியர்களுக்கு மெக்காவும், கிறித்தவர்களுக்குச் செருசலமும் புண்ணிய இடங்களோ, அவ்வாறே சீக்கிய மதத்தவர்களுக்கு, சீக்கியர்களுக்குப் பஞ்சாபில் உள்ள அமிர்தசரஸ் புண்ணிய இடமாகும். ''அமிர்தசரஸ்'' என்பதற்கு அமுதப் பொய்கை என்பது பொருள்.

பஞ்சாபில் அமிர்தசரசில் உள்ள கோயிலுக்கு அருகில்தான் **'ஜலியன் வாலா பாக்'** என்னும் தோட்டம் உள்ளது. (பாக் என்றால் தோட்டம்). இங்குதான், 1919 ஏப்பிரல் 13-இல் நூற்றுக்கணக்கான சீக்கியர்களும், இந்துக்களும் (அங்குள்ள இந்துக்கள் என்பவர்கள் பெரும்பாலும் பிராமணர்களே), ஆங்கிலப் படைத்தளபதி 'டயர்' என்பவனால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இப்படுகொலைக்குத்தான் **ஜலியன் வாலாப் படுகொலை'** என்று பெயர்.

இங்குள்ள பொற்கோயிலுக்கு அடிக்கல் நாட்டியவர் மியான் மிர் என்ற முசுலீம் மதகுரு. கட்டி முடித்தவர் ஐந்தாவது சீக்கிய குருவான அர்சுன் தேவர். அவர் ஒரு பேரருளாளர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் மாணவர் எழுச்சி-வரலாறு, 1965-இல் நிகழ்ந்த இந்தி எதிர்ப்பு வரலாற்றைப் படைத்துள்ளது. உலகில் எங்கணுமே இதுபோல் தாய் மொழிப் போராட்டத்திற்காக எழுந்து நின்று' வரலாறு நிகழ்ந்தது இல்லை.

ஆனால் ஏனோ தெரியவில்லை, அதன்பின் மாணவர் எழுச்சி-களே நடைபெறாமல் மாணவர்கள், பொழுது போக்குகள் கலையுணர்வுகள், விளையாட்டு உணர்வுகளிலேயே ஊறி, நொதிப்புற்றுக் கிடந்து வருகிறார்கள்!

தமிழகத்தில் சென்ற மாதம், அரசு உயர்த்திய பேருந்துக் கட்டணத்தைக் குறைக்க வேண்டி எழுந்து போராடிய மாணவர் எழுச்சி மிகவும் பாராட்டக் கூடியது; வரவேற்கக் கூடியது; போற்றிப் புகழக் கூடியது.

இவ்வெழுச்சி, நம் மாணவர்களிடம் இருக்க வேண்டிய உள்ளுணர்வு இன்னும் செத்துப்போகவில்லை - அவிந்து போகவில்லை என்பதையே காட்டி நிற்கின்றது. எனவே இதுபோலும் ஒருங்கிணைந்த மக்கள் நலம் கருதும் கொள்கை எழுச்சிகள், நம் மாணவர்களிடம் தோன்றுமானால், ஆ! நம் தமிழகத்தின் எதிர்கால வரலாற்றில் எத்தனைப் புரட்சிகளை உருவாக்கலாம்; எத்தகைய மறுமலர்ச்சிகளைப் படைக்கலாம். அவை பற்றி விரிவாக அடுத்து வரும் இதழ்களில் கூறுவோம். o

இந்தப் பொற்கோயிலைச் சீக்கியர்கள் 'ஹர்மந்திரி சாகிப்' என்று அழைப்பார்கள். 'சாகிப்' என்னும் சொல் சீக்கிய மதத்தில் மதிப்புமிக்க அடைமொழி.

கிறித்தவர்களுக்கு 'பைபிள்' போல, இசுலாமியர்களுக்குக் 'குர்-ஆன்' போல, இந்து மதத்தவர்களுக்குப் 'பகவத் கீதை' போல, சீக்கியர்களுக்குக் 'கிரந்த சாகிப்' என்பது புனிதநூல். அவர்கள் தங்கள் குருமார்களைக் குருசாகிப் என்று அழைப்பதைப் போல, இந்த நூல்களையும் 'சாகிப்' என்று அழைக்கிறார்கள். இது சமசுக்கிருதத்தில் 'ஸ்ரீ பகவத் கீதா' என்பது போலவும், தமிழில் 'திருக்குறள்' 'திருமந்திரம்' என்பது போலவும் பெருமையுடன் அழைக்கும் மரபை ஒத்ததாகும்.

பொற்கோவில், பெரும் நீர்ப்பரப்புக்கிடையே பளிங்குக் கற்களால் கட்டப்பட்டுள்ளது இதனுள் உருவம் எதுவும் இல்லை. உள்கோட்டத்தில் புனைவு செய்யப்பெற்ற மேடையில் புனித நூலான 'கிரந்த சாகிப்' வைக்கப் பெற்றிருக்கிறது. தொண்டர்கள் அதற்கு மென்மயிர் விசிறி வீசிய வண்ணம் இருப்பார்கள். புனித நூலை மறையோதிகள் (கிரந்திகள்) படித்த வண்ணமிருப்பர். அவர்களுடன் பாடகர்கள் பலரும் இருப்பர். அவர்களுக்கு 'இராகி' என்று பெயர். புனித நூலைக் கற்றுணர்ந்தவர்களுக்கு அறிவர் (ஞானி) 'க்யானி' என்று பெயர்.

சீக்கிய மதத்தில் எல்லா ஆண்களையும் 'சிங்' என்றே அழைப்பார்கள். பெண்களைக் 'குவார்' என்று அழைப்பார்கள். இது குமாரி என்பதன் மருவு. இதைக் 'கௌர்' என்றும் கூறுவதுண்டு

அமிர்தசரசு கோயிலைச் சுற்றியுள்ள நீர்ப்பரப்பு புனிதமானதாகக் கருதப்பெறுகிறது. இந்த நீரில் மூழ்கியவர்கள் எல்லா நோய்களிலிருந்தும் விடுபடுவார்கள் என்று ஒரு நம்பிக்கை அவர்களிடம் உண்டு.

கோயிலுக்குள் நுழைவதற்கும் பலவகையான கட்டுப்பாடுகள் உண்டு. புகையிலையின் தொடர்புடைய எந்தப் பொருளையும் உள்ளே எடுத்துச் செல்லக்கூடாது. ஆண், பெண் அனைவரும் தலையை மூடியிருக்க வேண்டும். ஆண்கள் தலைப்பாகையோ, தலைக்கவிப்போ (தொப்பியோ) அணியலாம். அவையில்லாவிட்டால் கைக்குட்டையினாலாவது தலையை மூடியே ஆகவேண்டும். குளத்தில் குளிப்பவர்கள் கூடத் தலையில் குட்டையை அணிந்திருப்பார்கள்.

உரத்துக் குரலெடுத்து இனிமையாகப் பாடும் 'இராகி'யின் பாடல் இசை இனிமையாக இருக்கும். நாள் முழுவதுமே இறைவனின் பெருமை ஓதப்பெறும். கோயிலினுள் செல்பவர்கள் கோதுமையினால் ஆன படையலைப் பெற்று, அதை மேடையின் முன்பு வைத்து வணங்குவார்கள். அன்பர்கள் அனைவர்க்கும் கோதுமைத் தேங்களி (அல்வா) வழங்கப்பெறும்.

கோயில் வளாகத்தில் இறைப்பற்றுளர்கள் தங்கும் பொருட்டுப் பல வசதி மிக்க அறைகள் உள்ளன. அடுத்துப் பெரிய உணவுச் சாலை, இங்கு மா உருட்டிகள் (ரொட்டிகள்) குன்றைப்போலக் குவிந்திருக்கும். பெரிய இரும்புச் சட்டிகளில் பருப்பு வகைகள் இருக்கும். நூற்றுக்கணக்கான தொண்டர்கள் ஆண்களும், பெண்களும் நாள் முழுவதும் இங்குப் பணிபுரிவார்கள். தங்க நகைகளும், பளபளப்பான ஆடையும் அணிந்த உயர் குடும்பப் பெண்கள் உண்கலன்களைச் சாம்பலும் மணலும் கலந்த பொடியினால் தூய்மைப்படுத்துவது ஓர் அருங்காட்சியாக இருக்கும்.

இந்த உணவுச் சாலைக்கு 'லங்கர்' என்று பெயர் எல்லாருக்கும் ஒரே வகை எளிய உணவு அளிக்கப்படும். 'பகிர்ந்தளித்தல்' குருமார்கள் வகுத்த அறம். பணிவுடனும், இன்சொல்லாலும் விருந்தோம்பி, அந்தத் தொண்டர்கள் எல்லாருக்கும் உணவளிப்பார்கள். ஏற்றத்தாழ்வின்றி எல்லாரும் சமதரையில் இருக்கை அமைத்து உணவை உண்பது உள்ளத்தை ஈர்க்கும்.

'குருத்வாரா பிரபந்தக்' குழு, இந்தக் கோயிலை மேலாளுமை செய்கிறது. வெளிநாடுகளில் வாழும் சீக்கியர்கள் இதற்குப் பணத்தை வாரி வழங்குகிறார்கள். இந்தியாவில் வசிப்பவர்களும் காணிக்கை அளிக்கிறார்கள்.

சீக்கிய சமயத்தில் சேர விரும்புகிறவர்கள் இங்குள்ள 'அகால் தக்த்'-இல் அமுதக் குடிப்புச் செய்து, உறுதி மொழி எடுத்துக் கொண்டு, அதில் இணையலாம். முன்பெல்லாம் அங்கு வாழும் பல இந்துக் குடும்பங்களில் ஒரு குழந்தையைச் சீக்கியராக்கி விடுவது வழக்கம். அந்தச் சடங்கிற்கு 'அம்ருத் ஷக்ஞ' என்று பெயர். (இது கிறித்துவராகச் சேருவதற்கு 'அறிவுக் குளியல்' (ஞான ஸ்நானம்) செய்வது போல ஒரு சடங்கு) இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அந்த ஆண் அல்லது பெண் புனிதமான ஐந்து அடையாளங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவை முறையே கச்சை, இரும்பு வளையல், முடி, சீப்பு, குறுவாள் ஆகியவை. இந்தச் சமயத்தில் சேர்ந்த எவரும் முடியையோ, முகத்தையோ மழிக்கக் கூடாது.

இந்தக் கோயிலுள் அலுவல் பொருட்டுச் சீருடை அணிந்த காவலரோ, படையினரோ நுழையக் கூடாது என்பது பல தலைமுறைகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு மரபு. அப்படி நுழைபவர்கள் 'பிரபந்த' அமைப்பின் மூலம் கடும் தண்டனைக்கு உள்ளாவார்கள். இவர்களுக்குத் தீர்ப்பு வழங்கும் குருமார்கள் ஐவருக்கு 'பஞ்ச ப்யாரே' என்று பெயர்.

மக்களின் எல்லா நிலையில் உள்ளவர்களுக்கும் அவர்களால் தண்டனை வழங்கப்படும். பஞ்சாப் முதலமைச்சராக இருந்த சுர்சித்சிங் பர்னாலாவுக்கு ஏனங்கள் துலக்கும் பணியும்,

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

சிறுகதை

கொடுத்து வைத்தது!

ஒரு கம்மத்தில் (கிராமத்தில்) இரண்டு மூதாட்டிகள் பக்கத்துப் பக்கத்து வீடுகளில் வசித்தனர். அந்தக் கம்மத்தில் இருந்த ஒரு பாழியில் (ஆசிரமத்தில்) அவர்கள் இருவரும் வேலை செய்து தங்கள் வாழ்க்கையை நடத்தினர்.

பக்கத்துப் பக்கத்து வீடுகளில் வசித்தாலும், ஒரே இடத்தில் வேலை செய்தாலும், அவர்கள் இருவரும் குணத்தில் மாறுபட்டிருந்தனர்.

ஒரு கிழவி யாருக்கும் எதுவும் கொடுக்க மனமில்லாதவள். இன்னொரு கிழவியோ யார் என்னகேட்டாலும் உடனே கொடுத்து விடுகிறவள்.

ஒரு நாள் மாலை இருவரும் பாழியில் (ஆசிரமத்தில்)தங்கள் வேலையை முடித்துக்கொண்டு, தங்கள் தங்கள் வீடு திரும்பியதுதான் நடந்தது. உடனே திடீரென்று, இடியும் மின்னலும் ஏற்பட மழைகொட்டத் தொடங்கியது.

இரவு எட்டு மணியிருக்கும். கருமிக் கிழவியின் வீட்டின் கதவை யாரோ தட்டினார்கள். 'யாராவது இரவலன் (பிச்சைக்காரன்) சாப்பாடு கேட்கப்போகிறான்' என்று அஞ்சி, அவள் இருந்த சாப்பாட்டை வெகு வேகமாகச் சாப்பிட்டு விட்டுக் கதவைத் திறந்தாள். ஒரு துறவி நின்று கொண்டிருந்தார்.

''அம்மா! நான் பக்கத்துக் கம்மத்துப் பாழியிலிருந்து வருகிறேன். அங்குள்ளவர்கள் குளிரினால் மிகவும் துன்பப்படுகின்றார்கள். ஏதாவது கம்பளி இருந்தால் கொடுங்கள். நாளைக் காலை திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்'' என்று சொன்னார்.

கருமிக் கிழவியிடம் பல புதுக் கம்பளங்கள் இருந்தன. ஆனால் அவளுக்கு எதையும் கொடுக்க மனம் இல்லை. ஆகவே, கடைசியில் ஒரு கிழிந்த முரட்டுப் போர்வை (துப்பட்டி)யைத் துறவியிடம் கொண்டு வந்து கொடுத்தாள்.

அதைப் பெற்றுக்கொண்ட துறவி அடுத்த வீட்டுக்குச் சென்றார். இரக்க குணமுள்ள அந்தக் கிழவியோ, 'இதை எடுத்துக் கொள்ளுங்கள், அதை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று தன்னிடமிருந்த கம்பளிகள், போர்வைகள், ஆடைகள் எல்லாவற்றையும் தேடிப்பிடித்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

அவற்றைப் பெற்றுக் கொண்ட துறவி, மிகவும் நிறைவுடன் சென்றார். அப்பொழுது தொடர்ந்து மழை பெய்து

கொண்டிருந்தது. இடையில் திடீரென்று ஒரு மின்னலும் அதைத் தொடர்ந்து பேரிடி ஒன்றும் இடித்தன. அந்த இடி அக்கிழவிகள் குடியிருந்த வீடுகளின் மேல் விழ, இரு குடிசைகளும் தீப்பற்றி எரிந்தன. ஆனால், இரு கிழவிகளும், குடில்கள் தீப்பிடித்தவுடன் வெளியே ஓடிவந்து, உயிர் தப்பினர் அதன்பின் குடிசைகளும், குடிசையிலுள்ள அனைத்துப் பொருள்களும் எரிந்து கருகிப்போயின.

அடுத்த நாள் காலையில், மழை நின்றிருந்தது. முன் வந்த துறவி மீண்டும் வந்து முதலில் அந்தக் கருமிக் கிழவியிடம் ''இந்தா'ம்மா! நீ கொடுத்தது'' என்று அவளிடம் வாங்கிச் சென்ற கிழிந்த போர்வையைத் திருப்பிக் கொடுத்தார். பின்னர் இரக்க குணமுள்ள கிழவியிடம் வந்து, ''இந்தா'ம்மா! நீ கொடுத்தவை' என்று அவளிடமிருந்து பெற்றுச் சென்ற அனைத்துக் கம்பளிகள், போர்வைகள், ஆடைகள் எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்தார்.

''நீங்கள் கொடுத்து வைத்தவைதாம் அவரவர்களுக்கு மிஞ்சின'' என்று கூறிப்போனார், துறவி!

(இரமன்லால் சோனி என்னும் இந்தி அறிஞர் எழுதிய கதை.)

—நன்றி: **தினமணி** 10-10-91 (சென்னை)

பரிசுச் சீட்டுகள்

பரிசுச் சீட்டுகள் முதன் முதலில் உரோமானியர்களால் நடைமுறைப் படுத்தப்பட்டன. அரசுக்கான பொருள் வரவை அதிகரிப்பதே இதன் நோக்கமாக இருந்தது பின்னர் 1530-இல் பிரான்சுதான் அதைப் பரிசு வழங்கும் திட்டமாக வெளிப்படுத்தியது. அதன் பின்னர் 1568-இல் இப்பரிசுத் திட்டத்தை இங்கிலாந்து கடைப்பிடித்தது. இந்தியாவில் 1960-இல் கேரள அரசுதான் முதன் முதல் இதை மேற்கொண்டது. இக்கால் இந்தியாவில் பரிசுச் சீட்டு மிகுந்த விற்பனையாவது நம் தமிழகத்தில்தான். தமிழகத்தில் சென்னை நகரைவிட, பரிசுச் சீட்டு விற்பனையாகும் இடங்கள் திருச்சி, கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு நகரங்களில் தாம். தமிழகத்தை அடுத்து இச்சீட்டு அதிக விற்பனையாகும் மாநிலங்கள் மேற்கு வங்காளம், மகாராட்டிரம், கர்நாடகம் ஆகிய இடங்களே. இதில் தமிழகத்தில் ஏறத்தாழ 4 இலக்கம் மக்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். இதை வாங்குபவர்கள் தொடர்ந்து மாதத்திற்கு 20 உருபா வரையில் செலவிடுகின்றனர்.

முத்து மொழிகள்

- நான்கு சொற்கள் உன்னைச் சீர்குலைக்கின்றன. அவை 'நான்' 'எனது' 'நீ' 'உனது'—என்பன.
- அறிவு செல்வம்; ஆனால், நீ எந்த அளவில் செல்வனாக இருக்கிறாய் என்று உன்னையே கேட்டுக்கொள்.
- பிறரைக் குற்றம் கூறி உன் விரலை அவர்கள் முன் நீட்டும் பொழுது, உன் விரல் உகிரில் (நகத்தில்) எவ்வளவு அழுக்கு உள்ளது என்று கவனித்துக் கொள்!
- உன் பேராசைகளை இப்பொழுதே வெற்றி கொள்ள முயற்சி செய். நீ முதுமை அடைய அடைய அவை இளமை கொள்கின்றன.
- வானில் உள்ள விண்மீன்களையும் எண்ணிவிடலாம்; கடலின் ஆழத்தையும் அளந்தறியலாம். ஆனால் நாம் இங்கு வந்து பிறந்திருக்கும் காரணத்தை மட்டும் அறிவது கடினம்.
- பிறரை நாம் மாற்ற விரும்புகிறோம், அவர்கள் நாம் விரும்புகிறபடி இருக்கவேண்டும் என்பதற்காக.
- எதையும் தெரிந்து கொள்ள நமக்கு அறிவு வேண்டும்; ஆனால் எதையும் உணர்ந்து கொள்ள நமக்குப் பட்டறிவு (அநுபவம்) வேண்டும்.
- நீ செய்வதற்கு ஒன்றுமே இல்லை என்று இப்பொழுது நினைத்தால், நீ செய்வதற்கு நேரமே இல்லாத நிலை நாளை உனக்கு வந்து சேரலாம்.
- மிகவும் முன்னேறிய மாந்தன் விலங்குகளினின்று எவ்வாறு வேறுபடுகிறான்? அவன் எண்ணங்களால்!
- நம் எண்ணத்தின் தன்மைகளைப் பொறுத்தே நம் பெருமையும் மகிழ்ச்சியும் அமைகின்றன.
- நாம் கடந்த காலத்தையே நினைத்துக்கொண்டிருந்தால் நிகழ்காலம் நமக்குக் கடினமாகவும், எதிர்காலம் நமக்கு இல்லாமலும் இருக்கும்.
- வீட்டில் உள்ள கொடுமைகள் தெருக்களில் குருதிகளைச் சிதறடிக்கும்படி செய்து விடும்.
- மனத்தில் அமைதியில்லையானால், வெளியில் உள்ள அனைத்தும் குழப்பமாகத் தெரியும்.
- குருடாக இருப்பதால் இருட்டில் இருப்பதாக ஆகிவிடாது.
- ஒருவருடைய குணங்கள் கண்ணாடியில் தெரிவதில்லை.

0 எச்சரிக்கையுடன் இரு. உன் ஒவ்வொரு வெளிப்பாடும் உனக்கொரு தகுதியை உண்டாக்குகிறது.

0 நீ எதை எதை மறந்து விடுகிறுயோ, அவைதாம் உன் வாழ்க்கைக்குரிய பாடங்களாக இருக்கும்.

0 உன் முயற்சிகளை முடிக்கு முன் அவற்றின் முடிவுகள் உனக்குத் தெரியா.

0 உன் வாழ்க்கை மரத்தை நீ உணர்ந்து கொள்ள விரும்புகிருயா? அல்லது அதன் நிழலில் அமர்ந்து மகிழ்ந்திருக்க நினைக்கிருயா?

0 நீ விழித்துக் கொண்ட பின்னர்தான், இவ்வளவு நாளும் தூங்கிக் கொண்டிருந்தாய் என்பது உனக்குப் புலப்படும்.

0 கற்களும் தடிகளும் எலும்புகளை முறிக்கும்; ஆனுல் சொற்கள் உறவை முறிக்கின்றன.

0 மிகவும் எளிய செயல் கூட சோம்பேறிக்கு மிகக் கடினமாக இருக்கும்.

0 பெற்ருேர்களின் நடத்தைகள் பிள்ளைகளுக்கு ஒருவகைப் பாடங்களாக அமைகின்றன.

0 ஒரு நல் வாய்ப்பை நீ தவற விட்டுவிட்டால், உன் கண்களைக் கண்ணீரால் திரையிட்டு மூடி விடாதே! உன் பார்வையைக் கூர்மையாக்கிக் கொள். அப்பொழுதுதான் அடுத்துவரும் வாய்ப்பை நீ தவறிவிடாமல் காத்துக் கொள்வாய்.

0 உரிமையின் விலை பொறுப்பு!

ஃ தமிழகத்திற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் ஏற்பட்டுள்ள காவிரி நீர்ச் சிக்கல் 1924-இலிருந்து தொடங்கியது. 1924-இல் தமிழகத்திற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி கர்நாடகம் தமிழகத்திற்கு ஆண்டு தோறும் 450 டி.எம்.சி. தண்ணீர் விடவேண்டும். இந்த ஒப்பந்தம் 50 ஆண்டுக் காலத்திற்கு ஏற்பட்டது. 1974-இல் இந்த ஒப்பந்தம் காலக்கெடு முடிவடைந்தது. அதன் பின்னர் இது புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனுல், சில அரசியல் காரணங்களால் இது புதுப்பிக்கப்படவில்லை, இதனுலேயே காவிரிநீர்ச் சிக்கல் தோன்றியது. ஃ

தெரிந்து கொள்ளுங்கள்!

o இராசீவின் மனைவி சோனியாவிற்கும் இத்தாலியின் அனைத் ததிகாரியும் கொடுங்கோலனுமான முசோலினிக்கும் ஒரு தொடர்பு உண்டு. என்ன தெரியுமா? முசோலினியின் தீவிர ஆதரவாளரும் அவரின் அடிவருடியுமான இசுடெ-போனொ மெய்னோ என்பவர்தான் சோனியாவின் தந்தை!

o தமிழ்நாடு அரசுச் சார்பில் உள்ள தொழில் நிறுவனங்கள் ஆறு. அவை : தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT); தமிழ்நாடு தொழில் முதலீட்டு வாரியம் (TIIC); தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO); தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT; தமிழ்நாடு தோல் மேம்பாட்டு வளர்ச்சி வாரியம் (TOLCO); தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) ஆகியன. இவற்றில் அரசின் மொத்த முதலீடு ஏறத்தாழ 210 கோடி உருவா ஆகும்.

o கடந்த 2-3-91இல் இலங்கையிலுள்ள கொழும்பு நகரின் நடுப்பகுதியில் காலை 8-20க்கு மிக வலிமை வாய்ந்த ஒரு குண்டு வெடித்தது. அதில் அந்நாட்டுப் படைத்துறைத் துணை அமைச்சர் இரஞ்சன் விசயரத்தின என்பவரும், அவரின் மெய்க்காவலர் ஒருவரும் பிற 28 படைத்துறையினரும் மாண்டு போயினர். இந்தக் குண்டு வெடிப்பு தமிழீழ விடுதலைப் புலிகளால் நிகழ்த்தப்பட்டது என்று பின்னர் தெரிய வந்தது.

o அனைவரும் விரும்பும் முளரி (ரோசா) மலரில் ஏறத்தாழ 5000 வகைகள் உள்ளன. அவை நிறத்திலும் அளவிலும் மணத்திலும் பலவேறுபாடுகளைக் கொண்டன.

o 1986-இன் புள்ளி விளக்கப்படி சோவியத்து உருசியாவின் மக்கள் தொகை 27 கோடியே 87 இலக்கம். இஃது இந்தியாவின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.

o 'ஆலிவுட்' நடிகையான 50 அகவையைக் கடந்த ஏலிசபெத் டெய்லர் என்பவர் (கிளியோபாத்ராவாக நடித்தவர்) எட்டு முறைகள் திருமணம் செய்து கொண்டுள்ளார். ஏழுமுறைகள் மணவிலக்குச் செய்துள்ளார்.

o உருசியா அனுப்பிய முதன் முதல் செயற்கைக் கோள் விண்ணில் பறக்க விட்ட நாள் 1957, அக்டோபர் 4-ஆம் பக்கலாகும்.

o இராசீவ் முதலமைச்சரானவுடன் 1986-இல் அமெரிக்கா சென்றார். அப்பொழுது அமெரிக்க அதிபராக இருந்தவர்

என்றி கிசிங்கர். அக்கால் இராசீவைக் கொல்ல ஒரு முயற்சி நடந்தது. அந்த முயற்சியில் ஈடுபட்டவர் குரு பிரதாப் விர்க் என்பவர். அவர் மேல் அமெரிக்க வழக்கு மன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. அதில் அவர் குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டார். (செய்தி சோவியத்து சிறப்புக் கட்டுரைகள் 27-3-1986.)

o சோவியத்து ஒன்றியத்தில் எல்லாப் பணிகளுமே இயந்திரங்களின் வழியாகவே செய்யப்படுகின்றன. கொடி முந்திரி, அல்லது தக்காளியை அறுவடை செய்யும் ஓர் இயந்திரம் 100 பேர் வேலைக்களைச் செய்கிறது.

o உடற்பயிற்சிகளும் விளையாட்டுகளும் ஒருவரின் உடல் நிலையைச் சீராக வைத்துக் கொள்ள உதவுகின்றன. நீந்துதல், மெதுவாக ஓடுதல், நடத்தல், விளையாடுதல் முதலியவற்றில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள் முதுமையிலும் இளமையாக இருகக முடிகிறது என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. குருதியழுத்தம், சர்க்கரை நோய், விரைந்த நாடித்துடிப்பு, எலும்புருக்கி நோய், மார்புச் சளி, மூச்சுத் தொல்லைகள் உள்ளவர்கள் இவற்றில் ஈடுபட்டால் அவர்கள் விரைவில் நலமடைவார்கள் என்றும் மருத்துவக் குறிப்புகள் கூறுகின்றன.

o கிழக்கு செருமனியும் மேற்கு செருமனியும் இணைந்து ஒரே செருமனியாக ஆனது மிக அண்மையில்தான். இரண்டும் ஒன்றான பின் ஒன்றிய செருமனியின் தலைநகர் பெர்லின்.

o திருப்பதி கோயிலில் உள்ள 1180 கல்வெட்டுகளில் தெலுங்கிலும் கன்னடத்திலும் உள்ள 50 கல்வெட்டுகள் போக மீதி உள்ள 1130 கல்வெட்டுகளும் தமிழ்க் கல் வெட்டுகளே!

o தமிழ்நாட்டில் ஆங்கிலேயர் காலத்தில் 1798ஆம் ஆண்டில்-தான் ஏறத்தாழ 100 அடி உயரமுள்ள ஒரு கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது இந்த விளக்கு தேங்காய் நெய்யால் எரிக்கப்பட்டது. இந்த விளக்கின் ஒளி கடலில் 17 கற்கள் தொலைவு தெரிந்தது.

o காந்தியடிகள் குசராத்தியர், விநோபா மராட்டியர், பகத் சிங் பஞ்சாபி-தாகூர் வங்காளி.

o ஓவிய உண்மையின்படி-வண்ணங்களின் மெய்ம்மைப்படி வெள்ளை நிறமும் கருமை நிறமும் நிறங்களே அல்ல. வெள்ளை என்பது எல்லா நிறங்களும் சேர்ந்தது என்றும், கருமை என்பது எந்த நிறமும் இல்லாதது என்றுமே பொருள் தரப்பெறுகிறது.

- பாரதியாரின் பாடல்களிலே 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' என்னும் வரியை, 'யாமறிந்த மொழிகளிலே 'தாய்மொழி போல்' என்று திருத்த விரும்பினாராம் வினோபா அடிகள்.
- தமிழ்நாடு அரசு, இதுவரை நடந்து வந்த மாடுபிடி விளையாட்டை (ஜல்லிக்கட்டு), உயிரிகள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழ்த் தடை செய்துள்ளது.
- பட்டுப் புழுக்களின் 100 முட்டைக் கூடுகளிலிருந்து ஏறத்தாழ 45 கிலோ பட்டு நூல் கிடைக்கிறது.
- கரும்பை யாரும் பூக்க விடுவதில்லை. கரும்பு பூத்துவிட்டால் சர்க்கரை அளவு குறைந்து விடுமாம் அக்குறைவு ஏக்கருக்கு 2 முதல் 4 கல்லெடை வரை இருக்குமாம்.
- தமிழகத்திலிருந்து கேரளாவிற்கு, உழவுக்குப் பெரிதும் பயன்படும் கால்நடைகள் (பெரும்பாலும் பசுமாடுகள்) நாள் ஒன்றிற்கு 10,000 அளவில் கொண்டு செல்லப்படுகின்றன. இவை பெரும்பாலும் இறைச்சிக்காகவே பயன்படுத்தப்படுகின்றன.
- உலகில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 10.7 விழுக்காட்டு அளவு நிலந்தான் வேளாண்மைக்கு உகந்ததாக உள்ளது. ஆனால் இந்தியாவில் மட்டும் உள்ள நிலப்பகுதியில் 51.5 விழுக்காட்டு நிலம் வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது. இது சீனாவில் உள்ள வேளாண்மைக்கான நிலப்பரப்பில் 1 84 மடங்கு அதிகம். இருப்பினும் சீனாவில் உண்டாகும் விளைச்சலை விட இந்தியாவில் மிகக் குறைவாகவே உள்ளது. சீனர்கள் நிறைய விளைவு செய்கின்றனர் இந்தியர்களை விடச் சிறந்த உணவை உண்ணுகின்றனர்.
- உலக ஒன்றிய நாடுகளின் பேரவை (ஐ. நா) உலகில் 170 நாடுகளைப் பொருளியல் வளர்ச்சி நிலையில் வரிசைப்படுத்தி ஓர் அறிக்கை (யு என்.டி.பி) வெளியிட்டுள்ளது. அதில் இந்தியா 123-ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவின் பொருளியல் முன்னேற்றம் எந்த அளவு கீழ்த்தரமாக உள்ளது என்பதற்கு இதுவே சான்று.

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலணி மெருகிடும் பணியும் ஒரு முறை தரப்பட்டன. அண்மையில் இவர் தமிழ் நாட்டின் ஆளுநராகவும் இருந்தது நினைவிருக்கும். தலைமைக் குருவே ஒரு சமயம் தண்டனைக்கு உள்ளானார். அந்தச் சமயத்தினர் எந்தத் தண்டனையையும மனமுவந்து ஏற்றுக் கொள்வார்கள். அத்தகைய கட்டுப்பாடுள்ள சமய அமைப்பு அது. குற்றம் புரிந்ததாகச் சமயத்திலிருந்து விலக்கப்படுபவர்கள் 'தங்க்கியர்' எனப் பெறுவர்.

தி. சா. ராசு நன்றி, 'தினமணி' 24-7-91

இந்தியாவில்....

- 1990-ஆம் ஆண்டில் 'விளம்பரம் வழியாக' இந்தியத் தொலைக்காட்சித் துறைக்கு 253.85 கோடி உருவாய் கிடைத்துள்ளது.
- கடந்த மூன்று ஆண்டுகளில், மணமகன் கொடை (வரதட்சணை) யால் இந்தியாவில் 11000 பெண்கள் உயிரிழந்துள்ளனர் என்றும், 28000 பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், பாராளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் சூலை 31-ல் நடந்த கூட்டத்தில் கூறியுள்ளார்.
- இன்றைய நிலையில் இந்தியாவுக்கு உள்ள வெளி நாட்டுக் கடன் 1.20,000 கோடியாகும்.
- இந்தியாவின் பாதுகாப்புச் செலவு 16,350 கோடி உருபாவாகும்.
- பிளவுபடாத இந்தியாவில் (இந்திய விடுதலைக்கு முன்) வடநாட்டில் எல்லா இடத்திலும் ஆவணங்கள் உருது மொழியிலேயே எழுதப்பட்டன. வழக்கு மன்றங்களில் பாரசீக மொழியே புழக்கத்தில் இருந்தது. இமாசலப் பிரதேசம், அரியாணு, பஞ்சாப் மாநிலத்தில் இணைந்திருந்தது. அரியாணவி, இமாசலி - ஆகிய மொழிகளையும் அவர்கள் உருது எழுத்திலேயே எழுதி வந்தனர். பஞ்சாபியர்களும் தங்கள் பஞ்சாபி மொழியை உருது எழுத்திலேயே எழுதினர். ஆனுல் பஞ்சாபியர்களுக்கு அவர்களின் பஞ்சாபி மொழியை எழுத குருமுகி -எழுத்தே இருந்தது. பாஞ்சாலம் எனப்படும் பிரிவு படாத பஞ்சாபில் பஞ்சாபி மொழியே முன்னர் நடைமுறையிலிருந்தது. ஆனுல் அங்கிருந்த பிராமணர்கள் (இந்துக்கள்) பஞ்சாபியர்கள் மொழியையும் அதை எழுதும் குருமுகி-எழுத்தையும் கற்க மறுத்துவந்தனர் தேவநாகரி எழுத்தையே அவர்கள் விரும்பினர்.
- இந்தியாவில் உள்ள 'ரிசர்வ்' வைப்பகத்திடம் சூலை 91ஆம் மாத இறுதிக் கணக்குப்படி உரு. 9,105·81 கோடி மதிப்புள்ள தங்கம் உள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.
- இந்தியாவில் வகுப்புக் கலவரங்களாலும், வன்முறைகளாலும் ஒரு நாளைக்கு ஏறத்தாழ 100 பேர் மாய்க்கப்படுகின்றனர். 1990-இல் இவ்வாறு 36,500 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.
- இந்தியாவின் 1991-ஆம் ஆண்டின் கணக்குப்படி மக்கள் தொகை 84 39 கோடி. இதில் விடுபட்டுள்ளவர்கள் கணிக்கும் வகையில் உள்ளவர்கள் தொகை 2 விழுக்காட்டினர் என்று கருதப்படுகிறது. இதையும் கணக்கில் சேர்த்தால் மொத்தத் தொகை 86.39 பேர். தமிழகத்தின்

மக்கள் தொகை 5,56 கோடி. உலகிலேயே சீனவுக்கு அடுத்தப்படி (சீனவில் 110 கோடி) இந்தியாவே அதிக மக்கள் தொகையுள்ள நாடு. நாட்டிலேயே மக்கள் வளர்ச்சி விழுக்காடு கேரளாவில் குறைவு. தமிழ்நாட்டில் அதற்கடுத்தபடி மக்கள் வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது. தென் மாநிலங்களைவிட வட மாநிலங்களில் (உத்திரப் பிரதேசம், பீகார், இராசத்தான் முதலியவற்றில்) மக்கள் வளர்ச்சி மிக அதிகமாக உள்ளது. இன்றைய நிலையில் இந்தியாவில் 1000 ஆண்களுக்கு 929 பெண்கள் என்ற அளவில் உள்ளனர். இந்தியாவில் படிப்பறிவு பெற்றவர்கள் 1901-இல் 100க்கு 5.35 பேரே இருந்தனர். ஆனல் 1991ல் (கடந்த 90 ஆண்டுகளில்) இது 52.11ஆக வளர்ந்துள்ளது. அஃதாவது இங்கு ஆண்களில் மூவரில் ஒருவரும் பெண்களில் இருவரும் படிப்பறிவற்றவர்களாக உள்ளனர். கேரளாவில்தான் இந்தியாவிலேயே படித்தவர்கள் அதிகம். அங்கு நூற்றுக்கு 90.59 பேர் படிப்பறிவுள்ளவர்களாக உள்ளனர். தமிழகத்தில் 63.72 விழுக்காட்டுப் பேரே படித்தவர்கள். இங்கு பம்பாயிலும் கல்கத்தாவிலும் மக்கள் எண்ணிக்கை ஒரு கோடிக்கும் அதிகம்.

o இந்தியாவின் அரசியல் அமைப்பியல் சட்டத்தின்படி 44-ஆவது பிரிவின்படி, குடியரசுத் தலைவர் நடுவண் அமைச்சரவையின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும் என்னும் நிலை உள்ளது.

o இனிமேல் இந்தியாவில் நடைபெறும் வட்டரங்கு (சர்க்கஸ்) காட்சிகளில் புலி, சிறுத்தை, குரங்கு, கரடி, நாய் ஆகிய விலங்குகளை வைத்துக் காட்டக்கூடாது என்று, இந்திய அரசு, விலங்குகள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டப்படி தடை செய்துள்ளது.

o இந்தியாவில் ஓராண்டில் மொத்தம் 77 கோடி கிலோ தேயிலை விளைகிறது. இதில் வடவிந்தியப் பகுதிகளில் 55 கோடியும், தென்னிந்தியாவில் 22 கோடி கிலோவும் விளைகிறது. மொத்த தேயிலையில் இந்தியாவுக்கு 55 கோடி கிலோ பயன்பாடு போக எஞ்சிய 22 கோடி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

o இந்தியாவின் கடற்கரைகளில் 11 பெரிய துறைமுகங்களும் 250 சிறிய துறைமுகங்களும் உள்ளன.

மின்மினி ஒளி

o மின்மினிப் பூச்சிகளின் உலர்ந்த உடல்களைப் பொடி செய்து, அந்தப் பொடியை உள்ளங் கையில் வைத்து அதில் எச்சிலைத் துப்பி ஈரப்படுத்தினல், அதிலிருந்து ஒளி கிடைக்கிறது. அதைக் கொண்டு ஒரு கடிதத்தைப் படிக்கும் அளவுக்கு ஒளி கிடைக்குமாம்.

விண்ணாய்வுக் கலன்கள்

விண்வெளியில் விடும் செயற்கைக் கோள்களைப் பற்றி ஒரு விளக்கம்:

நிலக் கோளத்தைச் சுற்றி வரும் **துணைக்கோளுக்கு Satellite** - என்று பெயர். கதிரவனைச் சுற்றிவரும்படி அனுப்பப் பெறுபவை செயற்கை கோள்கள். உயிரினங்களை (விலங்குகள், மாந்தர்கள்) ஏற்றிச் செல்பவை விண்கலங்கள். (Space Crafts).

கோள்களை ஆராய்வதற்கு அனுப்பப் பெறுபவை **கோளாய்வுக் கலன்கள்.** (Planet Probes).

விண்வெளியை ஆய்வதற்கு அனுப்பப் பெறுபவை **விண் ஆய்வுக் கலன்கள்** (Space Probes).

விண்வெளியில் மிதந்து பல மாதங்களுக்கு மாந்தர்கள் குடியிருக்கும் வசதி கொண்டவை **விண்வெளி நிலையங்கள்** (Space Stations).

விண்வெளிக்கும் நிலவுலகிற்கும் திரும்பத் திரும்பப் போய் வரும்படி அமைக்கப் பெறுபவை **விண்வெளி ஓடங்கள்** (Space Shuttles).

பிற நாடுகளில் உள்ள செயல்களையும் படை நிறுவனங்களையும், தளங்களையும், தொழில் அமைப்பு முதலியவற்றையும் வேவு பார்ப்பதற்காக அனுப்பப் பெறுபவை **வேவு செயற்கைக் கோள்கள்** (Reconnaissance Satellites). இவை **உளவுச் செயற்கைக் கோள்களும்** ஒரு வகை. அவை Intelligence Satellites என்று அழைக்கப்பெறும்

ஒரு நாடு ஏதோ ஒரு காரணத்திற்கு (உளவு, வேவு பார்ப்பதற்கோ வேறு எதற்கோ) அனுப்பிய செயற்கைக் கோளை, இன்னொரு நாடு எதிர்த்து அழிக்க விடப்பெறும் செயற்கைக் கோள் **எதிரீட்டுச் செயற்கைக் கோள்** (Anti-Satellites) எனப் பெறும்.

ஒரு நாட்டின் பாதுகாப்புப் பணிக்காக அனுப்பப் பெறுபவை **பாதுகாப்புச் செயற்கைக் கோள்கள்** (Defence Satellites) என்று பெயர்.

செய்திகளைப் பரப்புவதற்காக அனுப்பி வைக்கப் பெறுபவை **செய்திச் செயற்கைக் கோள்கள்** (Communications Satellites) எனப்பெறும்.

உலக நிலவரங்களையும் நாட்டு நிலைகளையும், நிலத்தின் மேற்பரப்புகளையும் படம் பிடித்து அனுப்பி விடுக்கப் பெறும் செயற்கைக் கோள்கள் ஒளிப்படச் செய்திச் செயற்கைக் கோள்கள் (Photographic Communications Satellites) எனப் பெறும்.

—இவ் வகையான செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பி வைக்கப் பயன்படுபவை ஏவுகணைகள் (Rockets) எனப் பெறும்.

○ உடலுக்கு நான்கு வகையான ஊட்டப்பொருள்கள் தேவை. அவை சர்க்கரைப் பொருள்கள் - (Carbohydrates), புரதப் பொருள்கள் (Proteins), கொழுப்புப் பொருள்கள் (Fats), சாரப்பொருள்கள் (Vitamins) ஆகியவை. இவை தவிர இரும்பு (Iron), சுண்ணும்பு (Calcium), கோபால்ட் (Cobalt) போன்ற தாதுப் பொருள்களும் தேவை.

அரிசி, கோதுமை போன்ற தவசங்களில் சர்க்கரைப் பொருள் அதிகம். கிழங்குகள், பழங்கள், கரும்பு முதலியவற்றிலும் சர்க்கரைப் பொருள் அதிகம்.

முட்டை, இறைச்சி, பருப்புவகைகள், பால் இவற்றில் புரதப் பொருள் உண்டு. இவற்றில் கொழுப்புச் சாரமும் உண்டு.

கீரை, பருப்பு, பயிறு வகைகளில் சாரப் பொருள்களும், தாதுப்பொருள்களும் உள்ளன.

□ நாம் ஒருவரை அடையாளம் காட்டும் பொழுது இன்னாரின் மகன் என்று தந்தையின் பெயரையோ தாயின் பெயரையோ முன் வைத்துச் சொல்கிறோம். குவைத்தில் ஒருவரை இன்னாரின் தந்தை என்று கூறுவது வழக்கம். அதற்கடையாளமாக 'அபு' என்னும் சொல்லைப் பெயருக்கு முன் சேர்க்கிறார்கள். 'அபு பக்கர்' என்றால் பக்கரின் தந்தை என்று பொருள். இதில் அபு என்னும் சொல் தந்தை என்னும் பொருள் தரும் சொல். இது தமிழில் உள்ள அப்பா என்னும் சொல்லின் திரிபாகும். ஆங்கிலத்திலும் வேறு சில ஐரோப்பிய மொழிகளிலும் கூட, அப்பா என்னும் சொல் அபே (Abe) என்று வழங்குகிறது. அப்பிரகாம் அல்லது ஆப்ரகாம் என்பதில் முன் உள்ள அப், ஆப் தந்தை என்று பொருள்தரும் சொற்கள் ஆகும்.

17. பிரான்சு (FRANCE)—குடியரசு.

நிலப்பரப்பு: 5,47,026 ச.அ.மா.
மக். தொ: 5,45, 39,000.
மக். தொ. பெ. (ஆண்டுக்கு): 0.4%
மக். வா. எ: ஆ: 67, பெ: 73.
எழுத்தறிவு: 99%
தலைநகர்: பாரிஸ். (Paris)
மொழி: பிரெஞ்சு. (French)
நாணயம்: பிரெஞ்சு பிராங்க் (Freneh Frank)

18. சுவிட்சர்லாந்து. (SWIZERLAND)—கூட்டாட்சி.

நிலப்பரப்பு: 41,293 ச.அ.மா.
மக். தொ. 64,00,000.
மக். தொ. பெ. (ஆண்டுக்கு) 0.2%
மக். வா. எ: ஆ: 72., பெண்: 78.
எழுத்தறிவு: 99%
தலைநகர்: பெர்ன். (Bern)
மொழி: செர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ரோமான்சு.
நாணயம்: சுவிசு பிராங்க் (Swiss Franc)

19. லியெச்டென்சுடெய்ன். (LIECHTENSTEIN)
—தலைமைக் குழு ஆட்சி.

நிலப்பரப்பு: 160 ச.அ.மா.
மக். தொ: 27,000.
மக். தொ. பெ: (ஆண்டுக்கு): 1.0%
மக். வா. எ: (விளக்கம் கிடைக்க வில்லை.)
எழுத்தறிவு: 100%
தலைநகர்: வடுசு (Vaduz)
மொழி: செருமன்.
நணயம்: சுவிசு பிராங்க்.

20. ஆசுட்டிரியா. (AUSTRIA)—குடியரசு.

நிலப்பரப்பு: 83,853 ச.அ.மா.
மக். தொ: 75,50,000.
மக். தொ. பெ: 0.1%
மக். வா. எ: (ஆண்டுக்கு): ஆ: 68; பெ: 75.
எழுத்தறிவு: 98%
தலைநகர்: வியன்னா. Vienna)
மொழி: செருமன்.
நாணயம்: சில்லிங். (Schilling)

21. மொனாக்கோ.(MONOCO)—தலைமை ஆட்சிக் குழு.

நிலப்பரப்பு: 195 ச.அ.மீ.
மக். தொ: 27,000
மக். தொ. பெ. (ஆண்டுக்கு): 3.0%
மக். வா. எ: ஆ: 70; பெ: 78.
எழுத்தறிவு: 99%
தலைநகர்: மொனாக்கோ—வில்லே. (Monaco—Ville)
மொழி: பிரெஞ்சு, மொனிகாசுக்கியு.
நாணயம்: பிரெஞ்சு அல் மொனிகாசுக்கியு பிராங்க்.

(தொடரும்)

பயனுள்ள மருத்துவக் குறிப்புகள்!

○ நித்திய கல்யாணிச் செடியின் வேரைக் காய வைத்துத் தூள் செய்து ஒரு புட்டிலில் அடைத்து வைத்துக் கொண்டு, நாள் தோறும் காலையில் உணவுக்கு முன், வாயில் ஒரு தேக்கரண்டி அளவு கொட்டிக் கொண்டு வெந்நீர் அருந்தி வர, சிறுநீரில் உள்ள சர்க்கரை குறைந்து கொண்டே வரும்; தொடர்ந்து சாப்பிட்டு வர சர்க்கரை நோய் அறவே நீங்கி விடும்.

○ வெள்ளைப் பூண்டுச் சாற்றில் ஒலிவ (ஆலிவ்) எண்ணெயைக் கலந்து, பூசி வந்தால், சொறி, சிரங்கு, படை—ஆகியவை அறவே நீங்கி விடுகின்றன.

○ மருதோன்றி (மருதாணி) இலைகளைக் கொஞ்சம் எடுத்து ஒரு சிறு துண்டு சவுக்காரத்தைச் சேர்த்து அரைத்துக் கருந்தேமல் உள்ள இடங்களில் பூசி வந்தால் அவை விரைவில் மறைந்து விடும். இதே தேமலுக்கு வெங்காயத்தை இரண்டாக வெட்டி, அதை முகத்தில் கறுப்புத் தேமல் உள்ள இடங்களில் இரவில் பூசிக் காலையில் கழுவி வந்தாலும் அவை விரைவில் மறையும்.

○ உடலில் திட்டுத் திட்டாக வெள்ளை நிறம் உள்ள இடங்களில், அடிக்கடி, தன் சிறுநீரைப் பூசி வர, வெள்ளை நிறம் நாளடைவில் மறைந்து போகும். உடல் அரிக்கின்ற இடங்களில் பூசி வர, அரிப்பும் நீங்கிக் குணமாகும்.

○ தேங்காய்ப் பாலுடன் கொஞ்சம் நல்ல சீரகத்தை வெண்ணெய் போல் அரைத்து வைத்துக் கொண்டு, உடலில் வரும் வேனல் கட்டிகள், கொப்புளங்கள், வெயர்க்குருக்கள் மேல் அடிக்கடி உலர உலர ஒரு நாளில் 5, 6 தடவைகள் அப்பி, மாலையில் வெந்நீரில் கழுவி வந்தால் விரைவில் அவை ஆறி அமுங்கி மறைந்து விடும்.

○ வெள்ளைப் பூண்டை வேக வைத்து நாள்தோறும் உண்டு வந்தால் நாள்பட்ட இருமல், வயிற்றுவலி, குடற்புண் ஆகியவை குணமாகும். இதையே நாள் தோறும் காலை வெறும் வயிற்றில் உண்டு வெந்நீர் அருந்தி வர, வயிற்றில் உள்ள கீரைப் பூச்சிகள், நீண்ட நாக்குப் பூச்சிகள் மலத்தின் வழியாக வந்து விடும். இதையே தொடர்ந்து சாப்பிட்டு வர 'கொலாசுட்ரல்' என்னும் கொழுப்புப் பொருளைக் கரையச் செய்து விடும்.

○ மாதுளைத் தோலுடன் பேரீச்சம் பழத்தை ஒன்றிரண்டு சேர்த்துக் களிபோல் அரைத்து உடலில் வரும் கட்டிகள் மேல் இரண்டு மூன்று நாள்கள் இரவில் தடவி, விடியலில் வெந்நீரில் கழுவி, மீண்டும் அதையே போட்டு வந்தால் கட்டிகள் வலி குறைந்து அமுங்கி விடும்.

இளைஞர்களுக்கு அம்பேத்கர் அறிவுரை!

இளைஞர்கள் சிறந்ததோர் கொள்கை நோக்கை (இலட்சியத்தை)முன் வைத்து, அதை அடைவதற்குப் பாடுபட வேண்டும். நாட்டு நலனுக்கோ தனிப்பட்ட உயர்வுக்கோ உரிய செயற் கொள்கையைத் தேர்ந்து கொண்ட பின், சோர்வுகள் பல வந்தாலும் தளராத உறுதியுடன் உழைக்க வேண்டும்...கடின உழைப்பாலேயே வெற்றி கிட்டும். ஒரே நேரத்தில் ஒரே நோக்கத்தை முன் வைத்துப் பாடுபட வேண்டும்...வாழ்க்கை என்பது குமுகாய நலனுக்கு உழைப்பதாகவே இருக்க வேண்டும்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)